**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: **திரு. பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி, எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் வள்ளியூர்

2026 வது வருடம், ஜூலை மாதம் - 31ம் நாள், வெள்ளிக்கிழமை

**DVC. No. 03/2017**

மீனா .....மனுதாரர்

/எதிர்/

1. சுடலைக்கண்ணு
2. கஸ்தூரி
3. கொம்பையா
4. எஸ்தர்
5. விமலா
6. விஜயலெட்சுமி ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 24.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. S. ஜேசுராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 6 வது எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், 3, 4 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. முருகன் அவர்கள் ஆஜராகியும், 5 வது எதிர்மனுதாரரை இவ்வழக்கிலிருந்து விடுவித்தும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்து இது நாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு பாதுகாப்பு உத்தரவு, பராமரிப்பு தொகை உத்தரவு, நகைகள் மற்றும் பணத்தை திருப்பித்தர உத்தரவு மற்றும் இதர பரிகாரங்கள் ஆகிய உத்தரவுகள் கேட்டு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 12ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம்</u>**

2. மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் கடந்த 12.12.2013 ம் தேதி திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணத்தின் பயனாக ஒரு ஆண்குழந்தை பிறந்துள்ளது. 2வது எதிர்மனுதாரர், 1வது எதிர்மனுதாரரின் தாயார், 3, 4வது எதிர்மனுதாரர்கள், 1வது எதிர்மனுதாரரின் மாமா, அத்தை ஆவார்கள். 5வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் பெரியம்மா மற்றும் 6வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் சகோதரியும் ஆவார்கள். மனுதாரருக்கு திருமணத்தின்போது 25 பவுன் தங்க நகையும், ரூ. 25,000/- ரொக்கமும், ரூ. 2,00,000/- சீர்வரிசை பொருட்களும் கொடுத்துள்ளார்கள்.திருமணத்திற்கு பிறகு களக்காடு காவல்நிலையம் அருகே வாடகை வீட்டில் தனிக்குடித்தனம் நடத்தி வந்த நாட்களில் 2வது எதிர்மனுதாரர் மனுதாரரின் வீட்டில் சேர்ந்து வாழ்வதாக புகுந்துள்ளார். மனுதாரரும் அவரை சந்தோசமாக வரவேற்றுள்ளார். 2வது எதிர்மனுதாரர் மனுதாரரின் வீட்டிற்கு சேர்ந்த சில தினங்களிலேயே மனுதாரரிடம் இன்னும் 25 பவுன் நகை மற்றும் ரூ. 75,000/- ரொக்கமும் பாக்கியுள்ளதாகவும் அதை எப்போது கொண்டுவருவாய் என்று மனுதாரரை அசிங்கமாக திட்டி கொடுமை செய்துவந்துள்ளார்கள்.

3, 4வது எதிர்மனுதாரர் வாரம் ஒருமுறை மனுதாரரின் வீட்டிற்கு சென்றுவருவது வழக்கமென்றும், அப்படி வரும் தினங்களில் 1வது எதிர்மனுதாரரிடம் நகை மற்றும் ரொக்கம் பாக்கியுள்ளது என்று கூறி தூண்டியதன்பேரில் 1 வது எதிர்மனுதாரர், மனுதாரரை அடித்து சித்ரவதை செய்து 1, 2 வது எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து பிச்சைக்காரியை கட்டிட்டு வந்துட்டான், இந்த நாயின் அப்பனும், அம்மாவும் சாகலாம் என்று கூறி மனுதாரரை கொடுமை செய்துள்ளார்கள். அதன்பின் 1வது எதிர்மனுதாரரின் அக்காவான 6வது எதிர்மனுதாரர் விபத்தில் சிக்கிவிட்டதாகவும், தொழிலில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகவும் உடனே ஏழு லட்சம் கொடுக்கவேண்டுமென்று கோபம் கொண்டு மனுதாரரை அடித்துள்ளார். 3, 4வது எதிர்மனுதாரர்கள் அங்கு வந்து உன் மனைவி உதவவில்லை என்றால் அவளை எரித்து கொன்றுவிட்டு அடையாளம் தெரியாமல் ஆக்குல உன் பரம்பரையை மாத்திடாத என்று கொலை வெறியை தூண்டியுள்ளார்கள். இதுகுறித்து மனுதாரர் அவரது பெற்றோரிடம் கூறியதால் அவரது பெற்றோர்கள் மனுதாரரின் தங்கையின்

திருமணத்திற்காக வைத்திருந்த 20 பவுன் நகைகளை அடகு வைத்தும், அக்கம்பக்கம் ரூ. 4,00,000/- கடன் வாங்கியும் மொத்தம் ரூ. 5,92,817/- ஐ 1வது எதிர்மனுதாரரின் உத்தரவுபடி 3 வது எதிர்மனுதாரரிடம் கொடுத்தும், மனுதாரரின் 25 பவுன் தங்க நகைகளையும் 3 வது எதிர்மனுதாரர் பெற்று சென்றுள்ளார்.

4. அதன்பின் கடந்த 05.07.2014 அன்று 2வது எதிர்மனுதாரருக்கு கண் ஆபரேசன் செய்யவேண்டும் என்றும், அதற்கு ரூ. 50,000/- தேவைப்படுகிறது என்றும் கூறி உனது வீட்டிலிருந்து வாங்கி வா என்று மனுதாரரிடம் கூறியபோது மனுதாரர் ஏற்கனவே பெற்ற பணத்திற்கு வட்டி கட்டமுடியாமல் வேதனைப்படுகிறார்கள் என்று கூறியதால் ஆத்திரமடைந்த 2 வது எதிர்மனுதாரர், மனுதாரரின் தலைமுடியை பிடித்து இழுத்து கடுமையாக தாக்கி வயிற்றில் மிதித்து கீழே தள்ளியுள்ளார்கள். இதனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் மனுதாரை மீட்டு களக்காடு சுகம் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். எனவே இது சம்பந்தமாக மனுதாரரின் தந்தை களக்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததால் கோபம் கொண்ட 1வது எதிர்மனுதாரர் மனுதாரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று மனுதாரரின் பெற்றோர், மனுதாரரின் தங்கை, தம்பி ஆகியோர்களை தாக்கியுள்ளார். அதன்பின் மனுதாரர் வீட்டில் இல்லாத சமயம் 3வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு சொந்தமான சீதனப்பொருட்களையும், மனுதாரர் வைத்திருந்த ரூ.1000/- பணத்தையும் எடுத்துசென்றுள்ளார்.

5. அதன்பின் மனுதாரருக்கு கடந்த 12.09.2014 அன்று ஆண்குழந்தை பிறந்துள்ளது. 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கு தொடர்ந்து கொலைமிரட்டல் விடுத்து வந்ததால் மனுதாரர் உயிருக்கு பயந்து அவரது தாய்மாமா வீட்டில் வசித்து வருகிறார். 3வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு போன் செய்து 1வது எதிர்மனுதாரருக்கு டைவர்ஸ் கொடுத்துவிடவேண்டியும், மனுதாரர் கெஞ்சி கேட்டதால் இன்னும் ரூ. 5,00,000/- கொண்டுவரவில்லை என்றால் உனது கணவனுக்கு வேறு திருமணம் செய்து வைக்கபோவதாகவும், பிரச்சனை செய்தால் மனுதாரரையும், குழந்தையையும் எரித்து அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடுவதாகவும் மிரட்டியுள்ளார். எதிர்மனுதாரர்களின் கொடுமை தாங்கமுடியாமல் 21.03.2016 அன்று வழக்கறிஞர் மூலம் மனுதாரர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். 1வது எதிர்மனுதாரர் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து மாதம்

ரூ. 1,00,000/- த்திற்கு மேல் வருமானம் பெற்று வருகிறார்.

6. எனவே மனுதாரருக்கு பாதுகாப்பு உத்தரவு, வாழ்க்கை பொருளுதவியாக 1 வது எதிர்மனுதாரர் மாதம் 50,000/- ஜீவனாம்சமாக தர உத்தரவிடவேண்டியும், மனுதாரருக்கு சொந்தமான 25 பவுன் நகைகள் , கடனாக பெற்ற ரூ. 5,92,817/- பணம் மற்றும் சீதனப்பொருட்களையும் திரும்ப அளிக்க உத்தரவும், இதர பரிகாரங்கள் வழங்க உத்தரவிடவேண்டியும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

7. 1, 2, 6 வது எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் 1 வது எதிர்மனுதாரரை கடந்த 13.02.2026 அன்றும், 2 வது எதிர்மனுதாரரை கடந்த 27.10.2021 அன்றும், 6 வது எதிர்மனுதாரரை கடந்த 22.09.2021 அன்றும் தோன்றாதரப்பினர்களாக்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 5 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மெமோ அடிப்படையில் இவ்வழக்கிலிருந்து கடந்த 27.02.2026 அன்று விடுவித்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>3, 4 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**

8. மேற்படி மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமெனவும், மனுவில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய். மனுதாரருக்கும், 1 வது எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனுவில் 3, 4 வது எதிர்மனுதாரர்கள் 1 வது எதிர்மனுதாரரின் மாமா, அத்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றும்,, 3 வது எதிர்மனுதாரர் மூலக்கரைப்பட்டியிலுள்ள புதிய எருசலேம் சபையில் போதகராக பணியாற்றி வரும்போது 1 வது எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் திருமணம் முடிந்த பின் இருவரும் மேற்படி சபைக்கு வந்தபோது தான் இருவரும் அறிமுகமாகியுள்ளார்கள். திருமணத்திற்கு பிறகுள சுமார் 2, 3 தடவைகள் மட்டுமே 3, 4 வது எதிர்மனுதாரர்ள் சந்தித்துள்ளார்கள். 3 வது எதிர்மனுதாரர் போதகர் என்ற புனிதமான பணியிலிருக்கும்போது 3 வது எதிர்மனுதாரரையும், அவரது பணியையும் கொச்சைப்படுத்தும்விதமாக மனுதாரர் கூறியுள்ளார். மனுதாரரின் நகை மற்றும் சீதனப்பொருட்கள் ஆகியவற்றை 3 வது எதிர்மனுதாரர் எடுத்துச்சென்றுள்ளதாக கூறுவது பொய்யாகும். 3, 4 வது எதிர்மனுதாரர்கள் மனுதாரரை அவரது கணவருடன் சுமார் 2, 3 தடவைகள் மட்டும் தான் நேரில் சந்தித்துள்ளார்கள். 3 வது எதிர்மனுதாரரை

கஷ்டப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை 3, 4 வது எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்**

9. மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக நிரூபண வாக்குமூலத்தின் மூலமாக விசாரித்து மனுவில் கண்ட விபரங்களை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். மனுதாரர் ம.சா.1 மூலமாக 1. திருமண சான்றிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், 2. குடும்ப அட்டை ம.சா.ஆ.2 ஆகவும், 3. திருமணத்தின் போது பதிவு செய்யப்பட்ட திருமண வீடியோ உள்ள குறுந்தகடு ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. அத்துடன் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்**

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 3 வது எதிர்மனுதாரர் எ.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் மூலமாக விசாரித்து எதிருரையில் கண்ட விபரங்களை ஒட்டி சாட்சியமளித்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.சா.1 மூலமாக எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ. 2 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. மனுதாரர் தரப்பில் அவரது கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுவை ஒட்டி வாதிட்டுள்ளார். மேலும் மனுதாரரின் மனு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தன்னை பராமரிக்க போதுமான வருமானம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருவதாகவும், 1 வது எதிர்மனுதாரருக்கு போதிய வருமானம் உள்ளது என்றும், 3, 4 வது எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின்பேரில் 1, 2 வது எதிர்மனுதாரர்கள் கொடுமை செய்ததாகவும், 1 வது எதிர்மனுதாரர் தற்போது ரியல் எஸ்டேட் மூலம் நல்ல சம்பளம் பெற்று வருகிறார் என்றும், மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்க மனுதாரர் தகுதியானவர் என்றும் வாதிட்டுள்ளார்.

12. 3, 4 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் அவரது கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிருரையை ஒட்டி வாதிட்டுள்ளார்கள். மேலும் மனுதாரர் தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என்றும், 3 வது எதிர்மனுதாரர் போதகராக பணிபுரிந்து

வருவதாகவும், மனுதாரரை சுமார் 2, 3 தடவை மட்டும் தான் 1 வது எதிர்மனுதாரருடன் நேரில் பார்த்துள்ளதாகவும், 3, 4 வது எதிர்மனுதாரர்களை கஷ்டப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்க கூடியதல்ல என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

13. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி என்னவென்றால், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்?**

14. மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறை நடந்துள்ளதா என்பதை ஆராய்கையில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தனக்கும், 1 வது எதிர்மனுதாரருக்கும் கடந்த 12.12.2013 அன்று திருமணம் நடந்ததாகவும், திருமண சமயத்தில் 25 பவுன் தங்க நகைகளும், ரூ.25,000/- ரொக்கமும் மற்றும் 2,00,000/- மதிப்பிலான சீர் சீராட்டுகள் செய்து திருமணம் செய்து கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நாங்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மீது வரதட்சணை கொடுமை செய்ததாக புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் 3, 4 வது எதிர்மனுதாரர்கள் தனது கணவரின் மாமா, அத்தை என குறிப்பிட்டுளேன் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

15. அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவை ஆராய்கையில் 3 வது எதிர்மனுதாரர் பாஸ்டர் என்றும், 4 வது எதிர்மனுதாரர் அவரது மனைவி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ளது போல 3, 4 வது எதிர்மனுதாரர்கள் தனது கணவரின் மாமா, அத்தை என குறிப்பிடவில்லை என்று தெளிவாக தெரியவருகிறது. மேற்படி புகாரின் அடிப்படையில் கடந்த 21.05.2015 அன்று நாங்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் குற்ற எண். 9/2015 ன் கீழ் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் **தங்கள் திருமணத்திற்கு 3, 4 வது எதிர்மனுதாரர்கள் வரவில்லை.** தங்கள் திருமணத்தை பாஸ்டர் தங்கமணி நடத்தி வைத்தார்.

16. பாஸ்டர் தங்கமணி மற்றும் 3 வது எதிர்மனுதாரர் வேறு வேறு சபையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசுவதில்லை என்றால் சரிதான். பாஸ்டர் தங்க மணிக்கும், 3 வது எதிர்மனுதாரருக்கும் பிடிக்காது என்றும், பாஸ்டர் தங்கமணியின் தூண்டுதலின்பேரில் 3, 4 வது எதிர்மனுதாரர்கள் தனது கணவரின் உறவினர்கள் என பொய்யாக சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியங்கள் மூலம் 3, 4 வது எதிர்மனுதாரர்கள் மனுதாரர் திருமணத்திற்கு வரவில்லை என தெளிவாக தெரியவருகிறது.

17. மேலும் மனுதாரர் மேற்படி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் திருமணம் முடிந்து எதிர்மனுதாரர் வீட்டில் ஆறு மாத காலம் வாழ்ந்து வந்தேன் என கூறியுள்ளார். ஆனால் மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் திருமணம் முடிந்த 2, 3 மாதத்தில் தனக்கும் தனது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டோம் என்றால் சரிதான். தற்போது வரை தாங்கள் தனித்தனியாகத்தான் உள்ளோம் என்றால் சரிதான். அவருடன் சேர்ந்து வாழக்கோரி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார். மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் நாங்குநேரி அனைத்துமகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக 1 வது எதிர்மனுதாரர் தன் மீது திருநெல்வேலி மாண்புமிகு 4 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் IDOP No. 210/2015 ல் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் தான் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு தான் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் எதிர்மனுதாரரை அழைத்து விசாரணை செய்யவில்லை. அதனால் வழக்கறிஞர் மூலமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பினேன் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார்.

18. மேற்படி சாட்சியங்கள் மூலம் 1 வது எதிர்மனுதார் திருநெல்வேலி மாண்புமிகு 4 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் IDOP No. 210/2015 ன் கீழ் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்

ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும் அதன்பிறகு தான் மனுதாரர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதில் எதிர்மனுதாரரை அழைத்து விசாரணை செய்யவில்லை என்பதால் வழக்கறிஞர் மூலமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பியுள்ளார் என்றும் தெளிவாக தெரியவருகிறது.

19. மேலும் 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவை ஆராய்கையில் மேற்படி புகார் மனுவானது மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மே மாதம் 2015 ம் வருடம் G7/27138/1990/15 ன் கீழ் கொடுத்துள்ளார் என்றும் மேற்படி புகார் மனுவை பரிசீலித்து நாங்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கடந்த 21.05.2015 அன்று குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெளிவாக தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் நாங்குநேரி நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு தான் தான் கொடுத்த புகாருக்கு வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியங்கள் மூலம் மேற்படி குற்ற வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை வந்த பிறகு தான் மனுதாரருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவந்துள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவிலும், சாட்சியத்திலும் 1 வது எதிர்மனுதாரர் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து மாதம் ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் பெற்று வருகிறார் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவ காலத்தில் 1 வது எதிர்மனுதாரர் கிறிஸ்தவ சபையில் ஊழியராக வேலைபார்த்து வந்தார் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியங்கள் மூலம் 1 வது எதிர்மனுதாரர் சம்பவ காலத்தில் கிறிஸ்தவ சபையில் ஊழியராக வேலை பார்த்து வந்துள்ளார் என தெளிவாக தெரியவருகிறது. ஆனால் மனுதாரர் தனது மனுவிலும், முதல் விசாரணையிலும் அதற்கு மாறாக 1 வது எதிர்மனுதாரர் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் செய்து மாதம் ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் பெற்று வருவதாக கூறியுள்ளார் என தெளிவாக தெரியவருகிறது.

20. மேலும் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் திருமண சமயத்தில் 25 பவுன் கொடுத்ததாக கூறியுள்ளார். ஆனால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவில் 20 பவுன் நகை போடப்பட்டதாக மட்டுமே கூறியுள்ளார். மேலும்

மனுதாரர் இந்நீதிமன்றத்தில் 3 வது எதிர்மனுதாரரிடம் கடந்த 21.04.2024, 22.04.2014, 23.04.2014 ஆகிய தினங்களில் மனுதாரரின் பெற்றோர் களக்காடு , முத்தூட் வங்கியில் அடமானம் வைத்து ரூ. 1,92, 817/- அக்கம் பக்கம் கடன் வாங்கி ரூ. 4 லட்சமும் சேர்த்து ஆக மொத்தம் ரூ. 5,92,817/- புரட்டி 1 வது எதிர்மனுதாரர் ஆணைப்படி 3 வது எதிர்மனுதாரரிடம் மனுதாரர் கொடுத்துள்ளார் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மனுதாரர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் அதற்கு முற்றிலும் மாறாக தான் பெற்றோரிடம் கடனாக 20 பவுன் நகை, வட்டிக்கு கடன் வாங்கி ரூ. 2,00,000/- ஆகியவற்றை தன் கணவரிடம் கொடுத்தேன் என கூறியுள்ளார். இவ்வாறு மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கும், இதற்கு முன்பு காவல்நிலையத்தில் கொடுத்த மனுவிற்கும் முன்னுக்குப்பின் முரணாக கூறியுள்ளார் என தெளிவாக சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்கையில் தெளிவாக தெரியவருகிறது.

21. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் மட்டுமே தான் 3, 4 வது எதிர்மனுதாரர்கள், 1 வது எதிர்மனுதாரரின் மாமா, அத்தை என கூறியுள்ளார். ஆனால் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் அவ்வாறு எதுவும் கூறவில்லை. 3 வது எதிர்மனுதாரர் பாஸ்டர் என மட்டுமே கூறியுள்ளார். மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் கழுகுமலையை சேர்ந்த ஆசிரியர் கவிதா என்பவரை தனக்கு தெரியும். அவர் அடிக்கடி களக்காடு வருவதால் தனக்கு பழக்கம். கவிதா தன்னிடம் போன் மூலம் தனது கணவரை வெறுக்கும் விதமாக பேசினார் என்றால் சரியல்ல. தான் அதை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 4 வது எதிர்மனுதாரர் பேசியதை தான் பதிவு செய்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது ஞாபகமில்லை என கூறியுள்ளார். 4 வது எதிர்மனுதாரர் அவ்வாறு பேசியதாக மனுதாரர் தரப்பில் பதிவுகள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் களக்காடு முத்தூட் வங்கியில் நகைகளை அடமானம் வைத்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ரசீது தாக்கல் செய்துள்ளேன் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மனுதாரர் தரப்பில் அவ்வாறு அடகு வைத்ததற்கான ரசீது எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

22. மேலும் மனுதாரர் தனது சாட்சியத்தில் 3 வது எதிர்மனுதாரரிடம் 25 பவுன்தங்க நகைகளை களக்காட்டில் உள்ள தனது வீட்டில் வைத்துதான்

கொடுத்தேன் என சாட்சியமளித்துள்ளார். ஆனால் மனுதாரர் காவல்நிலையத்தில் வைத்து கொடுத்த புகார் மனுவில் அதற்கு மாறாக 1வது எதிர்மனுதாரரிடம் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு மனுதாரர் தரப்பு வழக்கானது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது தெரியவருகிறது. மேலும் சாட்சியங்கள் வாயிலாக தம்பதிகள் மூன்று மாதத்திற்கு பிறகு தனித்தனியே வசித்து வந்துள்ளார்கள் என்றும், அதன்பிறகு தற்போது வரை தம்பதிகள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும் தெளிவாக தெரியவருகிறது. மேலும் 1வது எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், அதன் தொடர்ச்சியாக இம்மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் தெளிவாக தெரியவருகிறது.

23. மனுதாரரின் மனுவிற்கும், இதற்கு முன்பாக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கும் மனுதாரர் தரப்பு வழக்கானது முற்றிலும் மாறாக முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என சான்றாவணங்களை ஆராய்கையில் தெளிவாக தெரியவருகிறது. மேலும் மனுதாரர் சாட்சியம் நம்பத்தகுந்த நிலையிலும் ஏற்புடைய நிலையிலும் இல்லை. மனுதாரர் தரப்பு வழக்கு முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. மனுதாரர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் ஒருவாறும் அதற்கு மாறுபட்டு இம்மனுவிலும் கூறியுள்ளார். எனவே மனுதாரர் தரப்பு வழக்கில் பெருத்த சந்தேகம் ஏற்படுகிறது. மனுதாரர் நீதிமன்றத்தில் நகை அடகு வைத்ததற்கான ரசீது தாக்கல் செய்யாமல் தனது சாட்சியத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். மனுதாரர் தரப்பு வழக்கானது நம்பத்தகுந்த நிலையிலும், ஏற்புடைய நிலையிலும் இல்லை.

24. மேலே பரிசீலனை செய்த வகையில் மனுதாரர் தரப்பையும், எதிர்மனுதாரர்கள் தரப்பையும் ஒன்றாக சீர்தூக்கி ஆராய்கையில் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்களால் எந்தவித குடும்ப வன்முறையும் நிகழவில்லை என தெரியவருகிறது. எனவே மனுதாரருக்கு குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பலன்கள் கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது இன்று 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகரப்பட்டது.

MOSES JEBASINGH Digitally signed by MOSES JEBASINGH Date: 2026.07.31 18:28:54 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

**இணைப்பு:**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

1. ம.சா. 1 – மீனா

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | - | திருமண சான்றிதழ் | - | ம.சா.1 |
| 2 | ம.சா.ஆ.2 | - | குடும்ப அட்டை | - | ம.சா.1 |
| 3 | ம.சா.ஆ.3 | - | திருமணத்தின் போது பதிவு செய்யப்பட்ட திருமண வீடியோ உள்ள குறுந்தகடு | - | ம.சா.1 |

**மனுதாரர் தரப்பு சான்று பொருட்கள் : இல்லை**

**3, 4 வதுஎதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:**

1. எ.சா. 1 – கொம்பையா

3, 4 **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எ.சா.ஆ.1 | சிசி. எண். 95/2016 ன் புகார் மனு சான்றிட்ட நகல் | - | எ.சா.3 |
| 2 | எ.சா.ஆ.2 | சிசி. எண். 95/2016 ன் முதல் தகவலறிக்கை | - | எ.சா.3 |

**3, 4 வது எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்று பொருட்கள் : இல்லை**

MOSES JEBASINGH Digitally signed by MOSES JEBASINGH Date: 2026.07.31 18:29:30 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**